வென்ற்வேத்வில் தமிழ்க்கல்வி நிலையம்

WENTWORTHVILLE

TAMIL STUDY CENTRE

# தமிழ் அறிவுப் போட்டி 2019
# ஆண்டு 4

## மாதிரி வினாக்கள்

1. உழவர் திருநாள் எது?

1. தீபாவளி

2. தைப்பொங்கல்

3. நத்தார்

**<u>விடை:</u>**

2. தைப்பொங்கல்

2. தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை இயற்றியவர்?

**விடை:**

பாரதியார்

3. உங்கள் அம்மாவின் மூத்த சகோதரியை நீங்கள் எவ்வாறு அழைப்பீர்கள்?

1. அக்கா
2. சின்னம்மா
3. பெரியம்மா

**விடை:**

3. பெரியம்மா

4. கோடிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

"மான் ________________ ஓடும்".

1. துல்லி

2. துள்ளி

3. துழ்ழி

**விடை:**

2. துள்ளி

5. எமது நாட்டின் அரச சின்னத்தில் உள்ள உயிரினங்களில் ஒன்று எது?

1. பிளற்றிப்பஸ்

2. மக்பை

3. இமு (இமியு)

**<u>விடை:</u>**

3. இமு (இமியு)

6. எமது பாரம்பரிய உணவு அல்லாதது எது?

1. இடியப்பம்

2. பாஸ்ரா

3. பிட்டு

**விடை:**

2. பாஸ்ரா

7. நீரிலும் நிலத்திலும் வாழும் ஒரு உயிரினம் எது?

1. முதலை
2. மீன்
3. சிங்கம்

**<u>விடை:</u>**

1. முதலை

8. தமிழில் எத்தனை உயிர் எழுத்துக்கள் உள்ளன?

1. 13
2. 12
3. 5

**விடை:**

2. 12

9. “அவன் கேட்ட கேள்விக்கு நான் விடை

____________________________”

1. அலித்தேன்
2. அழித்தேன்
3. அளித்தேன்

**<u>விடை:</u>**

3. **அளித்தேன்**

10. ‘வகுப்பறை’ - இச்சொல்லைப் பிரித்து எழுதினால்:

1. வகுப் + அறை

2. வகுப்ப + அறை

3. வகுப்பு + அறை

**<u>விடை:</u>**

3. வகுப்பு + அறை

11. “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று”
என்ற பாடலை இயற்றியவர்?

1. திருவள்ளுவர்
2. ஔவையார்
3. பாரதியார்

**<u>விடை:</u>**

2. ஔவையார்

12. வானம் என்பதன் ஒத்த கருத்துடைய சொல்

1. ஆகாயம்
2. வண்ணம்
3. முகில்

**விடை:**

1. ஆகாயம்

13. திருக்குறளை எழுதியவர் யார்?

**<u>விடை:</u>**

**திருவள்ளுவர்**

14. சூரியன் உதிக்கும் திசை எது?

**விடை:**

கிழக்கு

15. ஒரு வருடத்தில் எத்தனை மாதங்கள் உள்ளன?

**விடை:**

பன்னிரண்டு (12)

16. நாய் குரைப்பது போல காகம்

1. உறுமும்

2. கரையும்

3. கனைக்கும்

**<u>விடை:</u>**

2. கரையும்

17. அவன் நேற்றுக் கடைக்கு .........

1. சென்றான்

2. செல்வான்

3. செல்கிறான்

**விடை:**

1. சென்றான்

18. உலகில் அண்ணளவாக எத்தனை தமிழர்கள் வாழ்கிறார்கள்?

**விடை:**

# ஏழு கோடி (70 மில்லியன்)

19. சந்திரன் என்பதற்கு ஒத்த கருத்துச் சொல் ஒன்று தருக?

**<u>விடை:</u>**

**நிலா**

**(திங்கள் / மதி / திங்கள் / அம்புலி / சந்திரன் ......)**

20. முதலையின் பற்கள் எப்படிப்பட்டவை?

1. மென்மையானவை

2. தடித்தவை

3. கூர்மையானவை

**விடை:**

3. கூர்மையானவை

21. இது என்ன?



**<u>விடை:</u>**

# வீணை

**22.** ஐம்பொறிகள் எவை?

**விடை:**

மெய் (உடல்)

வாய்

கண்

மூக்கு

செவி (காது)

23. வானவில்லில் உள்ள

நிறங்களில் மூன்றைக் கூறுக?

**<u>விடை:</u>**

ஊதா, கருநீலம், நீலம்

(பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு)

24. இது என்ன?



**<u>விடை:</u>**

**மேளம்**

**(தவில்)**

**25.** கிளி பறந்தது.

கிளியும் காகமும் ___________________

**விடை:**

பறந்தன